**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calender | : | | Miscellaneous | : | |
| Preliminary Register | : | | Case No. | : | **S.C.19/2022** |
| Sessions | : | | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 12** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| **Name :** | **கனகா** | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **17.10.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் மேலமாத்தூரில் குடியிருந்தேன். ஆஜர் எதிரி என்அக்கா மகன் ஆவார். கொளுந்தனாரின் மகனாவர். என்மாமியார் சொத்துக்களை அவருடைய பேரப்பிள்ளைகளான என்பிள்ளைகளான சுகன்யா, ஜெயலட்சுமணன் ஆகியோர்கள் பெயருக்கும் மற்றும் என்அக்கா பிள்ளையான எதிரி தினேஷ்க்கும் எழுதிவைத்தார். என்மாமியார் கரம்பியம் ரோட்டில் உள்ள ஓடைக்கு அருகே உள்ள வயல் காட்டில் குடியிருந்தார். அங்கு எனது கொளுந்தனார் கருப்பயைா, என்கணவர் பழனிசாமி, தினேஷ் மற்றும் அவர் மனைவி பாக்கியலட்சுமி மற்றும் பிள்ளைகள் ஆகியோர்கள் குடியிருக்கிறார்கள். 2021ம் வருடம் ஒருநாள் இரவு 11.00 மணியளவில் நான் மேலமாத்தூரில் வைத்துள்ள ஓட்டல் கடையில் இருக்கும்போது கரம்பியத்தை சேர்ந்த சின்னதுரை வந்து என் கணவர் பழனிசாமியை எதிரி தினேஷ்குமார் குத்திவிட்டதாக என்னிடம் வந்து சொன்னார். பின்னர் நான், என்மகன் மற்றும் மகள் வந்து பார்த்தபோது கரம்பியத்தில் கொடிகம்பம்அருகில் ரத்தக்காயத்தோடு

அவரை உட்கார வைத்திருந்தார்கள். என்கணவர் தன்அண்ணனையும் குத்தியதாகவும், அவர் எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லை என்று சொன்னார். பின்பு நடுகாட்டில் நானும், சின்னதுரை மற்றும் என்மகன் ஜெயலட்சுமணன் போய் பார்த்தபோது நடுகாட்டில் இருந்தவரை தூக்கிகொண்டு வந்து மெயின்ரோட்டில் போட்டுவிட்டு ஆம்புலன்சுக்கு போன் செய்தோம். என்கணவரை ஆம்புலன்சுலில் அழைத்து சென்றுவிட்டார்கள். அப்போது கருப்பயைா இறந்துவிட்டார். பின்னர் போலிசார் வந்து வீட்டிற்கு சென்று தினேஷை அழைத்துவந்தார்கள். சொத்துபிரச்சனையால் இப்படி செய்துவிட்டான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மேலமாத்தூரில் நான் இருந்த இடத்திற்கும், என்கொளுந்தன் இருந்த இடத்திற்கும் சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். போலிசார் என்னை விசாரிக்கும்போது சின்னதுரை எத்தனை மணிக்கு வந்து என்னிடம் தகவல் சொன்னார் என்று நான் சொன்னேன். ஆம்புலன்சுக்கு நான் போன் செய்யவில்லை. என் மகன் ஜெயலட்சுமணன் போன் செய்தான். என்கணவரை கொடிமரம் அருகில் உட்கார வைத்துவிட்டு வந்ததாக சின்னதுரை என்னிடம் சொன்னதாக போலிசார் விசாரணையில் நான் சொன்னேன். இந்த வழக்கில் புகார்தாரர் என் கணவராவர். எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், என்கணவர் புகார் கொடுத்ததால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சின்னதுரை எனக்கு தகவல் சொல்லவில்லை என்றும், நான் கரம்பியம் போகவில்லை என்றும், அதன்பின்னர் ஓடைக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.